DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 328/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : திருமதி.தேவி பிரபாகல்யாணி (மருத்துவர்) |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th October 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.08.2016 அன்று சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் நான் பணியிலிருந்தபோது இரவு 1 மணியளவில் மேலசிவகாமியாபுரத்தை சேர்ந்த சுந்தரி என்பவரை அவரது கணவர் சின்னராமர் என்பவர் அழைத்து வந்திருந்தார். சுந்தரி தன்னை அடையாளம் தெரிந்த 2 ஆண்களும், அடையாளம் தெரிந்த 2 பெண்களும் கைகளால் தாக்கி முடியை பிடித்து இழுத்தும் கீழே தள்ளி அவருடைய நெஞ்சில் மிதித்ததாக கூறினார். இச்சம்பவம் 08.08.2016 அன்று இரவு சுமார் 9 மணியளவில் அவருடைய கிராமத்தில் நடந்ததாக கூறினார். அவருடைய காயங்களை பரிசோதித்தபோது அவருக்கு மனிதன் கடித்ததால் உண்டான

பல்தடம் இடது கை சுண்டுவிரலில் காணப்பட்டது. மேலும், சுந்தரி அவரது வலது நெஞ்சில் வலி இருந்ததாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு இருந்த காயங்களை சாதாரண காயங்கள் என சான்று அளித்தேன். அவருக்கு நெஞ்சக பகுதியில் எக்ஸ்ரே எடுத்து பரிசோதித்தபோது அவருக்கு அந்த பகுதியில் எந்த தொந்தரவும் இல்லை என்று கண்டறிந்து சான்று அளித்தேன். நான் வழங்கிய சுந்தரியின் காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேதினம் இரவு 1.15 மணியளவில் சின்னராமர் என்பவர் அவசரசிகிச்சை பிரிவுக்கு வந்திருந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 ஆண்களும், அடையாளம் தெரிந்த 2 பெண்களும் கைகளால் தாக்கி கீழே தள்ளியதாக கூறினார். இச்சம்பவம் 08.08.2016 ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் அவரது கிராமத்தில் நடந்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. வலது முழங்கையில் 3 செமீx1 செமீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

2. இடது முழங்கையில் 2 செமீx0.5 செமீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது

அவரை புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று அளித்தேன். சின்னராமரின் காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சின்னராமருக்கு ஏற்பட்ட காயங்கள் அவரை கீழே தள்ளி தரையில் அவர் இழுக்கப்பட்டிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சுந்தரிக்கு ஏற்பட்ட 2 வது காயம் அவரது நெஞ்சில் காலால் மிதித்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

சின்னராமர் மற்றும் சுந்தரி என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது சுயநினைவுடன் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சின்னராமர் மற்றும்

சுந்தரி ஆகியோர்கள் அவர்களை அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் மற்றும் 2 பெண் நபர்கள் தாக்கியதாக என்னிடம் கூறினார்கள் என்றால் சரிதான். மேற்படி சின்னராமர் மற்றும் சுந்தரிக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்கள் அவர்கள் இருசக்கரவாகனத்தில் கரடுமுரடான சாலையில் செல்லும்போது கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் சுந்தரிக்கு ஏற்பட்ட முதற்காயம் மேற்கூறிய நிகழ்வால் ஏற்பட வாய்ப்பில்லை. சின்னராமர் மற்றும் சுந்தரிக்கு ஏற்பட்டமற்ற காயங்கள் மேற்கூறிய நிகழ்வால் ஏற்பட வாய்ப்புள்ளது. சுந்தரிக்கு ஏற்பட்ட முதற்காயத்தில் அவருக்கு பல்தடம் இருந்ததாக கூறவில்லை என்றால் சரியல்ல. சுந்தரிக்கு ஏற்பட்ட முதற்காயம் அவருக்கு மனிதன் கடித்ததால் ஏற்பட்ட காயம் என்று அ.சா.ஆ.5 ல் கூறியுள்ளேன். சுந்தரிக்கு ஏற்பட்ட 1வது காயத்தின் அளவுகளை நான் அ.சா.ஆ.5 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி அளவுகளை குறிப்பிடாததால் சுந்தரிக்கு ஏற்பட்ட 1வது காயம் மனிதன் கடித்ததால் ஏற்பட்டதாக கூறமுடியாது என்றால் சரியல்ல. சுந்தரிக்கு ஏற்பட்ட 1வது காயம் இருசக்கரவாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து அந்த வாகனத்தின் பற்சக்கரத்தில் அவரது சுண்டுவிரல் மாட்டியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை. சுந்தரி மற்றும் சின்னராமருக்கு அவர்கள் என்னிடம் சிகிச்சைக்கு வருவதற்கு 1மணி நேரத்திற்கு முன்பு அவர்களுக்கு ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ள காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சுந்தரிக்கு ஏற்பட்ட 2வது காயம் பொய்யாக அவரால் தெரிவிக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சுந்தரிக்கு ஏற்பட்ட 1வது காயம் கூர்மையான பொருட்கள் அவரது சுண்டுவிரலில் பட்டு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் அது பற்றி உறுதியாக சொல்லமுடியாது.

**மறுவிசாரணை இல்லை.**